ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

03 மாச்சு 2023

சேரல்: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

**தற்போதைய பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமாக முன்மொழியப்பட்டுள்ள சலுகை ரீதியான வழிமுறைகள்**

தற்பொழுது நிலவுகின்ற அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மீள்கொடுப்பனவு இயலாற்றல்கள் மீதும் பல்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளில் ஈடுபட்டுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் உறுதித்தன்மையின் மீதும் நிலையான வருமானம் ஈட்டுவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோரை உள்ளடக்கிய தனிப்பட்டவர்கள் (இதனகத்துப் பின்னர் ‘‘கடன்பாட்டாளர்கள்’’ எனக் குறிப்பிடப்படுவர்) மீதும் உடனடியான அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கிறது. இம்மோசமான தன்மைகள் தொடர்வது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் (இதனகத்துப் பின்னர் ‘‘வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்’’ எனக் குறிப்பிடப்படும்) வெளிநிற்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் அறவிடல்களின் மீது கடுமையான அச்சுறுத்தல்களைத் தோற்றுவிக்கக்கூடும்.

2. இதற்கமைய, கடன்களை மீளச் செலுத்துவதனை ஆரம்பிக்கும் விதத்தில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் தனிப்பட்டவர்களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களது வியாபாரங்களுக்கும்/ வருமானத் துறைகளுக்கும் புத்துயிரளிப்பதற்கான உள்ளார்ந்த வசதிகளை வழங்குகின்ற வேளையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை மீது ஏதேனும் அழுத்தங்கள் அதிகரிக்கப்படுவதனைத் தடுக்கின்ற விதத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பின்வருவன உட்பட பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2.1 எதிர்கால மீள்கொடுப்பனவு இயலாற்றல்/ வியாபாரத்தின் வளம்பெறும் தன்மையினை மதிப்பீடு செய்யும் நோக்கத்தின் அடிப்படையில், தற்போது நிலவும் மோசமான பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட **செயற்படுகின்ற மற்றும் செயற்படாத கடன்பாட்டாளர்களின் கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீள்அட்டவணைப்படுத்தல்.**

2.2 கடன்பாட்டாளர் சமர்ப்பித்த ஏற்றுக்கொள்ளத்தக்க மீள்கொடுப்பனவுத் திட்டத்தின் நிபந்தனைகளையடுத்து எதிர்கால மீள்கொடுப்பனவு இயலாற்றல்/ வியாபாரத்தின் வளம்பெறும் தன்மையினை மதிப்பீடு செய்யும் நோக்கத்தின் அடிப்படையில், **2020.01.01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாதவை என வகைப்படுத்தப்பட்டிருக்கின்ற செயற்படா கொடுகடன்**

**வசதிகளை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துதல்.**

2.3 நேரகாலத்துடனான தீர்ப்பனவுக் கட்டணங்கள் மற்றும் எதிர்கால வட்டி வீதங்களின் அறவிடல் என்பனவற்றிற்காக **குறைக்கப்பட்ட வீதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் தற்போது செயற்படுகின்ற அல்லது மீள்அட்டவணையிடப்பட்ட கொடுகடன் வசதிகளை நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்வதற்கு ஊக்குவித்தல்.**

3. இக்கோரிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை **கிளை வலையமைப்பு முழுவதற்கும் சுற்றோட்டப்படுத்துமாறும்** தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பொருத்தமான சலுகைகளை வழங்குவதற்குப் போதுமான வழிமுறைகளை கிளைகள் நடைமுறைக்கிடுவதனை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒப்பம்

**முனைவர் பி. நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி